**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 103**
**பாதுகாப்பு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை 2 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 ஆம் பகுதி | - | அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை |
| 2 ஆம் பகுதி | - | ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை |

## 1 ஆம் பகுதி

**பாதுகாப்பு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 222 | இலங்கைத் தரைப்படை |
| 223 | இலங்கை கடற்படை |
| 224 | இலங்கை வான்படை |
| 225 | பொலிஸ் திணைக்களம் |
| 226 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் |
| 291 | கரையோரம் பேணல் திணைக்களம் |
| 320 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் |
| 325 | இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் |

**2. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சினாலும் பின்வரும் திணைக்களங்களினாலும் வருடாந்தசெயல் நடவடிக்கைத் திட்டம் 2010 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

அமைச்சினால் 2010 ஆம் ஆண்டில் 04 வருமான குறியீடுகளிற்காக ரூபா 3,952,947,000 வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 11,435,163 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 42 சதவீதத்திற்கும் 114 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் வருமானங்கள் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட | உள்ளபடியான | மிகைச் சேகரிப்பு/ (குறைச் சேகரிப்பு) | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| அமைச்சின் செயலாளர் | 10-03-07-05 | 11,000,000 | 11,435,163 | (435,163) | (3.96) |
| விமானப் படைத்தளபதி | 20-03-20-16 | 140,000,000 | 159,499,724 | (19,499,724) | (14) |
| கட்டுப்பாட்டாளர் நாயகம் | 20-03-02-07 | 3,635,500,000 | 4,076,329,643 | (440,829,643) | (12.13) |
| ஆணையாளர் நாயகம் | 20-03-02-03 | 166,447,000 | 69,266,459 | 97,180,541 | 58.39 |
| மொத்தம் | | 3,952,947,000 | 4,316,530,989 | | |

**3.3 முற்பணக் கணக்குகள்**

**3.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 05 முற்பணக் கணக்குகள் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் 05 முற்பணக் கணக்குகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| அமைச்சு / திணைக்களம் | விடய இலக்கம் |
|---|---|

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| திணைக்களம் | | | | | | | |
| சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 32001 | 190,000,000 | 165,272,248 | 50,000,000 | 160,143,997 | 218,000,000 | 8,549,480 |

### 3.3.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்

அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்தினால் 01 வர்த்தக முற்பணக் கணக்கு பேணிவரப்பட்டிருந்தது.

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய 01 வர்த்தக முற்பணக் கணக்கு 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திணைக்களம் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு நடவடிக்கை |
|---|---|---|
| இலங்கை கடற்படை | 22302 | வெடி பொருட்களை விற்பனை செய்தல் |

#### (ஆ) எல்லைகளைப் பின்பற்றல்

01 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| திணைக்களம் | விடய இல. | அதிகூடிய செலவின எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய வரவு மீதி எல்லை | உள்ள படி யானவை | அதிகூடிய பொறுப்புக்கள் எல்லை | உள்ளபடி யானவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை கடற்படை | 22302 | 446,000,000 | 347,829,290 | 420,000,000 | 458,822,375 | - | - | 330,000,000 | 99,358,637 |

### 3.3.3 கலைத்தல் முற்பணக் கணக்குகள்

கலைத்தல் முற்பணக் கணக்கு தொடர்பில் 6 வருடங்கள் கடந்த ரூபா 1,738,194 தீர்க்கப்பட வேண்டிய மீதியும் ரூபா 1,738,194 பெறுமதியான முடிவுறுத்தப்படாத சொத்துக்களும் காணப்பட்டன.

## 3.4 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்குகள்

### 3.4.1 கட்டுநிதிக் கணக்கு

1,998,714,733

============

## பகுதி II

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 103 – பாதுகாப்பு அமைச்சு

பாதுகாப்பு அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானம் கணக்கு, நிதியக் கணக்குகள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 நவம்பர் 17 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, முற்பணக் கணக்குகள் மீதான இணக்கக் கூற்றுக்கள் மற்றும் நிதியக் கணக்குகள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

சேத இழப்புக்கள் பதிவேடு நிதிப்பிரமாணம் 110 பேணிவரப்பட்டிருக்கவில்லை

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) தலைப்பு 103 இன் கீழ் 06 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 369,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 15 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 50% இற்கும் 100% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(iii) நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக மீளாய்வாண்டிற்காக ரூபா 52,678,204 பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

(i) 2011 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் அமைச்சினால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 39,587 ஆகும். அந்த மீதி 2010 திசெம்பர் 31 இலிருந்து நிலவிவரும் மீதியாகும்.

(ii) நிதிப்பிரமாணம் 371(2)(இ) பிரகாரம் பெற்றுக்கொண்ட துணைக் கட்டுநிதிகள் குறித்த கருமம் முடிவுற்றவுடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 17 சந்தர்ப்பங்களிற்குரிய ரூபா 4,141,453 தொகையான துணைக் கட்டுநிதிகள் குறித்த கருமம் முடிவுற்று 04 முதல் 08 மாதங்கள் வரையான தாமதத்தின் பின்னரும் தீர்க்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

(i) 2009 ஜனவரி 29 ஆந் திகதிய 200/2009 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தின் பிரகாரம் எக்காரணத்திற்காகவும் பழைய நானாவித வைப்புக்கள் கணக்கிலிருந்து புதிய நானாவித வைப்புக்கள் கணக்கிற்கு மாற்றீடுகள் செய்யப்படக்கூடாத போதிலும் அதற்கு முரணாக 00046119 ஆம் இலக்க காசுப் புத்தகத்திற்குரிய 3/166 ஆம் இலக்க பழைய நானாவித வைப்புக்கள் கணக்கில் நீண்டகாலமாக தீர்க்கப்படாது வைக்கப்பட்டிருந்த ரூபா 6,997,743 ஆன மீதி 2010 பெப்ரவரி 17 ஆந் திகதிய 15/17 ஆம் இலக்க புதிய நானாவித வைப்புக்கள் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் ரூபா 506,683 தொகை குறித்த கருமத்தினை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்திக்கொள்ளப்படாது அமைச்சின்

நிலுவை வருமானங்கள் மேலும் அதிகரிப்பதனைத் தவிர்ப்பதற்காக உரிய கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 879,570 பெறவேண்டிய நிலுவை வருமானத் தொகையில் 2008 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 280,150 தொகையும் 2009 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 398,520 தொகையும் உள்ளடங்கியிருந்தது. அம் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்காக மீளாய்வாண்டில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) கடந்த ஆண்டுகளிலிருந்து முன்னெடுத்து வரப்படுகின்ற மீதிகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் அமைச்சின் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ள முற்பணக் கணக்கு மீதிக்கும் திறைசேரி கணனி அச்சுப்பிரதிகளில் அத்திகதியில் காட்டப்பட்டுள்ள மீதிக்கும் இடையே ரூபா 1,383,480 வேறுபாடு காணப்பட்டது.

(ii) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 1987 இலிருந்து 2008 ஆம் வரையான ஆண்டுகளில் அமைச்சிலிருந்து சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச் சென்ற 313 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,454,770 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடியான அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கு மீதான இணக்கக்கூற்றினை பரிசோதனை செய்ததில் அசைவுறாத 395 நிலுவைக் கடன் மீதிகள் காணப்பட்டதுடன் அக் கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 10,941,370 ஆகும். இக்கடன் மீதிகளை அறவிடுதல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(iv) மரணித்த அல்லது ஓய்வுபெற்ற, பதவியில் இடைநிறுத்தப்பட்ட, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் ஏனைய காரணங்களால் நிலுவையாகவுள்ள ரூபா 3,070,021 பெறுமதியான கடன் மீதிகள் 05 ஆண்டுகள் பழமையானமையால் அறவிடுதல் நிச்சயமற்றதாக் காணப்பட்டன.

## 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

02 ஆந் திகதி இராணுவ தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணைக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்குகள் மற்றும் கணக்கிணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கைத் தரைப்படையின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கட்டுநிதிக் கணக்கு

2011 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் திணைக்களத்தினால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 6,857,440,647 ஆகும். அம்மீதியில் 2005 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் ரூபா 14,339,723 மீதியும் உள்ளடங்கியதாகும்.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக் கூற்று

22201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவீடு

| | | பதவியணியினர் | பதவியணியினர் | எண்ணிக்கை | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| * | **சிவில் பதவியணியினர்** | | | | |
| i. | மூன்றாம் மட்டம் | 14 | 09 | 05 | - |
| ii. | இரண்டாம் மட்டம் | 201 | 114 | 87 | - |
| iii. | ஆரம்ப மட்டம் | 6,386 | 8,345 | - | 1,959 |
| iv. | ஏனையோர் (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 4,537 | 2,092 | 2,445 | - |
| | உப மொத்தம் | 11,138 | 10,560 | 2,537 | 1,959 |
| * | **சீருடை பதவியணியினர்** | | | | |
| i. | உத்தியோகத்தர்கள் | 10,426 | 9,709 | 717 | - |
| ii. | ஏனைய மட்டத்தினர் (நிரந்தர / தொண்டர்) | 189,719 | 188,365 | 1,354 | - |
| | உப மொத்தம் | 200,145 | 198,074 | 2,071 | - |

## 3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 223 – இலங்கை கடற்படை

இலங்கை கடற்படையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூலை 18 ஆந் திகதி கடற்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச்

(i) நி.பி. 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடிந்திருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 2 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் வைப்பு மீதிகளின் மொத்தம் ரூபா 1,503,000 ஆகும்.

(ii) நி.பி. 427 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கின் மீதி திறைசேரிப் புத்தக மீதியுடன் கணக்கிணக்கம் செய்யப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் பொது வைப்புக் கணக்கின் மீதி திறைசேரிப்புத்தகத்தின் படியான மீதியினைக் காட்டிலும் ரூபா 25,457,652 குறைவாகக் காணப்பட்டது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 22301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 41,182,323 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) நிதிப்பிரமாணம் 427 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரிப் புத்தகத்துடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) கடன் மற்றும் முற்பண மீதிகளைக் காட்டும் தனிப்பட்ட கணக்கு மீதிகளின் பட்டோலையின் மொத்தம் கட்டப்பாட்டுக் கணக்கு மீதியுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 688,759,838 ஆக காணப்பட்டதுடன் தனிப்பட்டோர் மீதிகளின் பட்டோலையின் மொத்தம் ரூபா 654,098,652 ஆகும்.

**(உ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

**(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்கின் படி 06 ஆண்டுகளாக முன்னெடுத்து வரப்படுகின்ற ரூபா 1,296,690 வைப்பு மீதிகள் தொடர்பில் சான்றாவணங்கள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் உறுதிப்படுத்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை. அம்மீதி சமப்படாத ஐந்தொகையினை சமப்படுத்துவதற்காக அவ்வப்போது பயன்படுத்தியிருந்த மீதிகளின் மொத்தமாகும் என இலங்கை கடற்படையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**(ii) அதிகரித்துக் கணக்கீடு செய்தல்**

பின்வரும் அதிகரித்துக் கணக்கீடு செய்தல்கள் அவதானிக்கப்பட்டன.

இலங்கை கடற்படையினால் 2010 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்களின் மீதி ரூபா 3,802,298,997 ஆக காணப்பட்டதுடன் அந்த பொறுப்புக்கள் மீதான காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| 1 ஆண்டிற்கு குறைந்த | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| ரூபா | ரூபா |
| 3,802,298,997 | 3,802,298,997 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கணக்காய்வுத் திகதியான 2011 நவம்பர் 22 ஆந் தியதியில் ரூபா 2,533,651,487 ஆன பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,268,647,510 ஆன பொறுப்புக்களை தீர்ப்பதற்கு கடற்படையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் ஏற்படுத்திக் கொண்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 6,005,439 பெறுமதிகொண்ட பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிக்காட்டப் பட்டிருக்கவில்லை.

## 3.5 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நிதிப் பிரமாணம் | | |
| | நி.பி. 94 | 3,786,338,658 | வேறு முறைகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்த வருடாந்த மதிப்பீட்டில் அதற்காக நிதி |

| | | |
|---|---|---|
| | | ஏற்பாடு காணப்பட்டால் அன்றி எந்தவொரு திணைக்களத்தினாலும் வேலை, சேவை அல்லது வழங்கலிற்காக எவ்வித செவினத்திற்கு அல்லது பொறுப்பிற்கு கடப்பாட்டினை ஏற்படுத்தாதிருக்க வேண்டு மாயினும் இலங்கை கடற்படையினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 137 | 111,197,371 | ஏதேனுமோர் வேலை, சேவை அல்லது வழங்கலொன்றினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வெளித்தரப்பினருக்கு பணம் செலுத்தக்கூடாத போதிலும் இலங்கை கடற்படை அதற்கு முரணாக வழங்குனரிற்குப் பணம் செலுத்தியிருந்தது. |
| நி.பி. 371(2)(ஆ) | 3,074,297 | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் உப கட்டுநிதியின் பெறுமதி ரூபா 20,000 இற்கு குறைவாக காணப்படவேண்டிய போதிலும் அதற்கு முரணாக 2010 ஆம் ஆண்டில் எட்டு சந்தர்ப்பங்களில் உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| நி.பி. 371(2)(இ) | 7,101,239 | வழங்கப்பட்ட உப கட்டுநிதிகள் அந்த உப கட்டுநிதி வழங்கப்பட்ட கருமம் முடிவுற்றவுடன் தீர்க்கப்பட வேண்டியிருந்தும் 2009 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 2,893,371 உப கட்டுநிதிகளும் 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 4,207,868 உப கட்டுநிதிகளும் மீளாய்வாண்டின் இறுதிவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 395(இ) | - | சகல அரசாங்க நிறுவனங்களினாலும் ஒவ்வொரு மாத முடிவிலும் காணப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களின் நிலமையினை தொடர்ந்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கிக் கணக்கிணக்க விபரமொன்றை தயாரிக்க வேண்டிய போதிலும் 0007041344 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்குரிய 2010 ஒக்தோபர் |

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 05 | 05 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 08 | 06 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 187 | 81 | 106 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 1,704 | 1,468 | |
| (v) | ஏனையோர் | | 252 | 231 |
| | (சமயாசமய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 337 | 90 | |
| | மொத்தம் | 2,241 | 1,902 | 339 |

முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் பீ.எம்.எஸ். /ஏ 08/21 ஆம் இலக்க 2009 நவம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் படி சேவைமூப்பு அடிப்படையில் III ஆம் வகுப்பின் 252 பதவிகளிற்காக மீளாய்வாண்டில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீருடை பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | உத்தியோகத்தர்கள் | 3,577 | 2,442 | 1,135 |
| (ii) | கடற்படையினர் | 51,423 | 50,406 | 1,017 |
| | மொத்தம் | 55,000 | 52,848 | 2,152 |

## 3.10 உள்ளகக் கட்டுப்பாடு

பின்வரும் உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்**

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

(i) இலங்கை வான்படையால் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| தலைப்பு/வருமானக் குறியீடு/விடய இல. | கணக்கின் பெயர் |
|---|---|
| 224 | ஒதுக்கீட்டுக் கணக்கு |
| 22401 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று |

(ii) இலங்கை வான்படையால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிவரப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 பெப்ரவரி 28 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக் கவில்லை |

**(ஆ) கட்டுநிதிக் கணக்கு**

2011 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் இலங்கை வான்படையால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 286,945,581 ஆகும். அம்மீதி 2001 யூலை 01 முதல் நிலவிவரும் மீதியாகும்.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2 வருடத்திற்கும் மேற்பட்ட ரூபா 32,691,716 மொத்தமான வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலுவைத் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக நி.பி. 175(2) இன் பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

(i) 22401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 23,466,822 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) 2010 திசெம்பர் 31 இல் சேவைகள் மற்றும் சிவில் பிரிவில் அறவீடு நிலுவையாவதற்கு தாக்கமளித்திருந்த காரணங்கள் மற்றும் நிலுவைகாகக் காணப்பட்ட காலப்பகுதி மீதான குறிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| **காரணம்** | **காலப்பகுப்பாயவு** | | | | |
|---|---|---|---|---|---|
| | 1 ஆண்டிற்கு குறைய | 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளிற்கு குறைய | 2 ஆண்டுகளிற்கு மேல் 3 ஆண்டுகளிற்கு குறைய | 3 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | மொத்தம் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சேவைப்பிரிவு | | | | | |
| (i) ஓய்வுபெறல் மற்றும் மரணித்தல் | 8,569,478 | 288,420 | 395,029 | 1,694,825 | 10,947,752 |
| (ii) பதவி நீக்கம் மற்றும் பதவி வறிதாக்கல் | 17,600 | 35,500 | 94,311 | 608,042 | 755,453 |

எரிபொருள் பவுசர்களும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இலங்கை வான் படையால் 2010 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்களின் மீதி ரூபா 820,408,568 ஆக காணப்பட்டதுடன் அந்த பொறுப்புக்கள் 01 ஆண்டிற்கும் குறைவான காலப்பகுதிக்குரியனவாகும்.

## 4.5 செயலாற்றல்

2010 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் படி விமானப்படையின் செயல்முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் வருமாறு

**(அ) திட்டமிடல் மற்றும் செயலாற்றல்**

2010 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் படி விமானப்படையின் செயல்முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் வருமாறு

(i) 2010 ஆம் ஆண்டில் பறந்திருந்த விமான மணித்தியாலங்களின் எண்ணிக்கை 11,766 ஆக காணப்பட்டதுடன் விமான செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக அதில் 2730 மணித்தியாலங்கள் அல்லது 23.2% செலவிடப்பட்டிருந்தது. மேலும் விமான ஓட்டுநர் அற்ற விமானங்களினால் 35.25 மணித்தியால அவதானிப்பு பறத்தல் மூலம் காலாற்படை மற்றும் கடற்படை செயற்பாடுகளிற்கு உதவப்பட்டது.

(ii) காலாற்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் 48,579 பேரிற்கு விமானப் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருந்தமை மற்றும் 213,401 கி.கிராம் பொருட்கள் போக்குவரத்துச் செய்யப்பட்டிருந்தன.

## 4.6 மனிதவள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சேவை | | | |
| உத்தியோகத்தர்கள் | 1,788 | 1,361 | 427 |
| ஏனைய பதவியினர் | 36,214 | 32,869 | 3,345 |

பேணிவரப்படாதிருந்தது. இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான சொத்துக்களின் உரிமைத்துவம், உள்ளமை மற்றும் பாதுகாப்பான தன்மை தொடர்பில் நம்பிக்கைகொள்ள முடியாதிருந்ததுடன் ஒதுக்கீட்டுக் கணக்கினால் வெளிப்படுத்தப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதிகள் தொடர்பில் நியாயமான உறுதிப்பாட்டினை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

## 5. ஒதுக்கீட்டுத் தலைப்பு 225 – பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூன் 09 ஆந் திகதி பொலிஸ் மாஅதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

உள்ளடங்கியிருந்தது. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிற்கு ஓய்வூதியத்தினை செலுத்தும் வேலைகளிலும் மரணித்த உத்தியோகத்தர்களின் விதவைகள் அநாதைகள் நிதியிலிருந்து நலன்களை செலுத்தும் சந்தர்ப்பங்களிலும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3, 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் பொலிஸ் திணைக்களம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 76,126,972 என்பது கணக்காய்வில் வெளிப்பட்டது. இந்த உத்தியோகத்தர்களிற்கு கடன்களை வழங்குகையில் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி பிணைகள் பெறப்பட்டிருப்பின் அப்பிணையாளர் களிடமிருந்து அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் ஏனைய தரப்பினர்களிடமிருந்தோ குறித்த கடன் மீதிப் பெறுமதியினை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் பொலிஸ் திணைக்களம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத ஏனைய கடன் மீதிகள் ரூபா 1,734,908 இணக்கக்கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் அக்கடன் மீதிகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஏனைய கடன் மீதகளாக கருதுவது எவையென கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படாதிருந்ததுடன் எவ்வாறிருப்பினும் அந்த ஏனைய கடன் மீதிப் பெறுமதியினை உடனடியாக அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தும் இதுவரை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களினால் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2009 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்திற்கு வெளியே வேறு அமைச்சுக்களிற்கும் திணைக்களங்களிற்கும் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11.4 மில்லியனை அறவிட்டுக் கொள்வதற்காக பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத 1 □ 2 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட ஊழியர் கடன்கள் 15% ஆகக் காணப்பட்டதுடன் 2 □ 5 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட அளவு 26% ஆகும். 05 ஆண்டுகளிற்கு மேற்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத ஊழியர் கடன்களின் அளவு 34% ஆகும்.

## 5.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல் குறைபாடுகள்

**வங்கிக் கணக்குகள்**

31 வங்கிக் கணக்குகளிற்குரிய செல்லுபடுயாகும் காலம் கடந்திருந்த வழங்கப்பட்டு ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 3.6 மில்லியன் பெறுமதியான 571 காசோலைகள் தொடர்பில் நி.பி. 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.7 சேதங்கள் மற்றும் இழப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ள பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு உத்தேசித்துள்ள இழப்புக்கள் அறிக்கையின் படி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட ரூபா 500,312,483 ஆன 1,035 இழப்புக்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 349,783,659 ஆன 418 இழப்புக்களும் காணப்பட்டன. அதில் ரூபா 18,488,284 இற்கான 174 இழப்புக்கள் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்டவை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2010 ஆம் ஆண்டில் ரூபா 7,957,376 பெறுமதியான ஹார்ட்வெயார் விடயங்கள் அவசரத் தேவைகள் எனக்கருதி (ஒரே வகையான பொருட்கள் ஒரே நாளில் ஒரே நிறுவனத்திடமிருந்து) பல பகுதிகளாகப் பிரித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,360,545 பெறுமதியான பொருட்கள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகப் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டது.

## 5.9 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

நாவலப்பிட்டி மற்றும் தங்கல்ல பொலிஸ் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக மத்திய பொறியியலாளர் மதியுரைப் பணியகத்திற்கு முறையே ரூபா 146,162,463 மற்றும் ரூபா 232,983,100 (பெறுமதிசேர் வரி நீங்கலான பெறுமதி) தொகைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. வேலைத்தள பொறியியலாளருடன் இணைந்து 03 சிட்டைகளிற்கான அளவீடுகள் உருப்படி ரீதியாகப் பரிசோதிக்கப்பட்டதுடன் கீழே விபரமாகக் காட்டப்பட்டுள்ளவாறு ரூபா 9,792,417 தொகை மிகையாக சான்றுறுதி செய்யப்பட்டு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| ஒப்பந்தம் | சிட்டை இல. | செய்யப்பட்ட வேலைகளிற்கும் மிகையான விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|

ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூலை 29 ஆந் திகதி கட்டுப்பாட்டு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**6.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மற்றும் நிதியக் கணக்குகள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணைக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**6.3 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) இலுள்ள பொது அவதானிப்பு மற்றும் 6.4 இலிருந்து 6.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக் கூற்று**

22601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 118,405,815 கூட்டுமொத்தமாக இருந்ததுடன்

ஆட்பதிவுத் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 யூலை 29 ஆந் திகதி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 7.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 7.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 7.4 இலிருந்து 7.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

(i) தலைப்பு 227 இன் கீழ் 01 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 03 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 54% இற்கும் 98% இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(iii) நடைமுறையல்லாச் சொத்துக்கள் அசைவு அறிக்கையில் 2010 ஜனவரி 01 ஆந் திகதியில் காட்டப்படவேண்டிய ரூபா 29,186,896 சொத்துக்கள் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை..

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணுதல்**

2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ.ஏ.ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் மற்றும் அதற்கான துணைச்சாதனங்கள் தொடர்பில் கணனிச் சொத்துப் பதிவேடொன்று பேணிவரப்படாதிருந்ததுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,237,609 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்று வந்திருந்தன.

## 7.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

2007 முதல் இலத்திரனியல் அடையாள அட்டைச் செயற்திட்டத்திற்காக ஏறத்தாழ ரூபா 295 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் குறைப்பயன்பாட்டில் காணப்பட்டது.

## 7.5 செயலாற்றல்

2010 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீடு / செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (இ) செலவினம் மீதான கட்டுப்பாடு

நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக 06 மீண்டெழும் செலவின விடயத்தின் கீழான சேமிப்புக்கள் ரூபா 23,624 இனை மிகைத்து ரூபா 2,982,739 இனாலும் 02 மூலதன செலவின விடயத்தின் கீழான சேமிப்புக்கள் ரூபா 4,029 இனை மிகைத்து ரூபா 5,049,753 இனாலும் பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

### (ஈ) கட்டுநிதிக் கணக்கு

2010 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கரையோரம் பேணல் திணைக்களத்திடம் ரூபா 2,603,760 ஆன கட்டுநிதி வரவு மீதிகள் 01 ஆண்டிற்கும் குறைவாக நிலவியது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீன்பிடி நீரியல்வள அமைச்சிற்கு முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,504,396 முற்பணத் தொகை 2011 ஏப்ரல் 30 ஆந் திகதி வரைக்கும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 427 இலுள்ள ஏற்பாடுகளின் படி கட்டுநிதி மீதியை திறைசேரிப் புத்தகத்துடன் கணக்கிணக்கம் செய்திருக்கவில்லை.

### (உ) பொது வைப்புக் கணக்கு

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் மீதி 43,488,009 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழ்வே தரப்பட்டுள்ளது.

| 1 ஆண்டிற்கு குறைய | 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளிற்கு குறைய | 2 ஆண்டுகளிற்கு மேல் 5 ஆண்டுகளிற்கு குறைய | 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 30,557,235 | 3,233,772 | 9,124,982 | 572,020 | 43,488,009 |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மேற்படி மீதியிலுள்ள நி.பி. 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடிந்திருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 2 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் வைப்பு மீதிகளின் மொத்தம் ரூபா 9,697,002 ஆகும்.

(ii) நிதிப்பிரமாணம் 592 இன் பிரகாரம் வைப்புக்கள் பதிவேட்டுடன் வைப்புக்கள் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணிவரப்பட்டிருக்கவில்லை. அதனால் தனித்தனி வைப்பு மீதிகள் கட்டப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**8.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தாத மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

கீழே பகுப்பாய்வுசெய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தாதும் குறைப்பயன்பாடுடையதுமாக காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்கள் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தாதும் குறைப்பயன்பாடுடையதுமாக இருந்த காலம் |
|---|---|---|
| (i) வாகனங்கள் | 02 | 04 ஆண்டுகளிற்கும் மேலாக |
| (ii) இயந்திராதிகள் | 02 | 04 ஆண்டுகளிற்கும் மேலாக |
| (iii) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் | 06 | 05 ஆண்டுகளிற்கும் மேலாக |
| (iv) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இயந்திரங்கள் | 01 | 05 ஆண்டுகளிற்கும் மேலாக |

**(ஆ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

கரையோரம் பேணல் திணைக்களத்தினால் சில சொத்துக்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினர்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் வகை | சொத்துக்களின் எண்ணிக்கை/அளவு | சொத்துக்களை பயன்படுத்தும் நிறுவனம் | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| வாகனங்கள் | 01 | முன்னாள் அமைச்சரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் | 711,000 |

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

கரையோரம் பேணல் திணைக்களத்தினால் 2010 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்களின் மீதி ரூபா 5,713,960 ஆக காணப்பட்டதுடன் அந்த பொறுப்புக்கள் 01 ஆண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து நிலவி வருகின்றது.

**8.5 செயலாற்றல்**

2010 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீடு / செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி கரையோரம் பேணல் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

போதியளவில் அடையப்படாத பிரதான கருமங்கள்

(vi) [3] தேசிய கடற்கரை□ கருமங்களை செயற்படுத்துவதற்கான பரிசோதனை மற்றும் அவதானித்தல் நடவடிக்கைகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் தரவுகளை சேகரித்தல் நடவடிக்கை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vii) கரையோர வலய முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் மாற்றங்களிற்கான ஆய்வு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 8.6 சேதங்கள் மற்றும் இழப்புக்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் கீழே காட்டப்பட்டவாறு இழப்புக்களும் சேதங்களும் இடம்பெற்றிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2009 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன விபத்தினால் ஏற்பட்டிருந்த ரூபா 450,000 மதிப்பீடு செய்யப்பட்ட சேத இழப்பினை அறிவிப்பதற்கும் நிதிப்பிரமாணம் 109 மற்றும் 113 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் முனைந்திருக்கவில்லை.

(ii) 2004 சுனாமி அனர்த்தத்தினால் சொத்துக்களிற்கு ஏற்பட்டிருந்த சேத நட்டத்தினை புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு பணிப்புரை கிடைக்கப்பெற்று, புத்தகங்களிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு இதுவரை பணிப்புரை கிடைத்திருக்கவில்லை.

## 8.7 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 29 | 21 | 08 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 292 | 243 | 49 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 103 | 85 | 18 |
| | மொத்தம் | 428 | 352 | 76 |

### (ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளம்

| ஊழியர் வகையும் விடுவிக்கப்பட்ட எண்ணிக்கையும் | எந்த நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டது என்பது | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|

| | | |
|---|---|---|
| கடலோரப் பாதுகாப்பு உத்தியோகத்தர் - 48 | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 2006 ஆம் ஆண்டிலிருந்து |

(இ) இவ்வாறு உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டமையால் கடலோரப் பாதுகாப்புப் படைக்குரிய கருமங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு பதவியினர் இல்லாமை காரணமாக திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதில் மிகவும் சிக்கல் தோன்றியிருந்ததுடன் உத்தியோகத்தர்களிற்கு மீளாய்வாண்டில் மாத்திரம் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 871,640 செலுத்தப்பட்டிருந்தது.

## 8.8 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

### (ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்

மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

## 9. ஒதுக்கீட்டுத் தலைப்பு 320 – சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 நவம்பர் 17 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

திணைக்களத்தின் தலைமையக பூங்கா மண்டபத்தில் இடம்பெற்ற நல்லிணக்க சந்திப்பிற்காக அங்கீகாரமின்றி ரூபா 95,029 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2011 மார்ச் 20 ஆந் திகதியளவில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான வென்னவத்த களஞ்சியத்தில் 26 வீல்பெரோ எஞ்சியுள்ளமையும் அவை அனைத்தும் இலகு வேலைகளிற்காக (Light duty) பயன்படுத்தப்படும் வீல்பெரோக்கள் என்பதும் அவை அனைத்தும் ஒரே நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் உறுதியானது. பார வேலைகளிற்காக (Heavy duty) பயன்படுத்தப்படும் வீல்பெரோக்களின் சந்தை விற்பனை விலை ரூபா 1,950 என்றும் கழிவு நீக்கி ரூபா 1,750 வீதம் வழங்க முடியுமென்றும் இலகு வேலைகளிற்காக (Light duty) பயன்படுத்தப்படும் வீல்பெரோக்களின் சந்தை விற்பனை விலை ரூபா 1,850 என்றும் கழிவு நீக்கி ரூபா 1,650 வீதம் வழங்க முடியுமென்றும் அந்த நிறுவனத்தினால் 2011 ஏப்ரல் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி 2011 ஏப்ரல் 26 ஆந் திகதி நிலவிய விலையின் படி கணக்கிடுகையில் வீல்பெரோவினை உற்பத்திசெய்த தனியார் கம்பனியிடமிருந்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த இலகு வேலைகளிற்காக பயன்படுத்தப்படும் வீல்பெரோக்களை வேறு 4 வழங்குனரிடமிருந்து மிகவும் கூடிய விலைக்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் திரட்டிய நிதியத்திற்கு ரூபா 502,525 நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 9.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 1.2.1(அ) விடயத்தின் படி அரசிற்கு உச்ச நலைனை கொண்டுவரும் வகையில் கொள்வனவு அதிகாரிகளினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணான வகையில் செயற்பட்டிருந்தமை காரணமாக சீ.ஐ.சீ வகை 10 லீற்றர் கொண்ட 20 தீந்தை டின்களை ரூபா 126,520 தொகைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த சந்தர்ப்பத்தினை கைவிட்டு ரூபா 210,000 செலுத்தி கொள்வனவு செய்திருந்தமையால் திரட்டிய நிதியத்திற்கு ஏற்படுத்தியிருந்த மொத்த நட்டம் ரூபா 83,480 (ரூபா 59,380+ரூபா 24,100) என்பது கணக்காய்வில் வெளிப்பட்டதுடன் இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 156(1) இன் படி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) (i) 40 மில்லி லீற்றர் பொலிஸ் திரவ போத்தலொன்றினதும் 36 கிராம் பொலிஸ் டின் ஒன்றினதும் உச்ச சில்லறை விலை ரூபா 75 என உற்பத்தியாளர் குறித்திருக்கையில் பொலிஸ் திரவ போத்தலொன்று ரூபா 99.50 வீதம் ஹாட்வெயார், வயர், சமயலறை உபகரணங்கள் போன்றவற்றை விற்பனை செய்யும் தனியார் நிறுவனமொன்றிடமிருந்தும் பொலிஸ் டின் ஒன்று ரூபா 98 வீதம் ஹாட்வெயார், எழுதுகருவிகள் மற்றும் பொறியியல் பொருட்களை விற்பனை செய்யும் மற்றொரு தனியார் நிறுவனமொன்றிடமிருந்தும் கொள்வனவு செய்திருந்தமையால் திரட்டிய நிதியத்திற்கு ரூபா 1,164,700 நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(ii) கிவி சப்பாத்துப் பொலிஸ் உற்பத்தியாளரிடமிருந்து 2011 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்காய்வில் பெற்றுக்கொள்ளப்பட்ட விலையின் படி 40 மில்லி லீற்றர் பொலிஸ் திரவ போத்தலொன்றில் குறிக்கப்பட்டுள்ள உச்ச சில்லறை விற்பனை விலை ரூபா 80 ஆன போதிலும் அந்த போத்தலை ரூபா 67 வீதமும் 36 கிராம் பொலிஸ் டின் ஒன்றினது உச்ச சில்லறை விலை ரூபா 80 ஆன போதிலும் அதனை ஒன்று 67 வீதம் எவ்வளவு எண்ணிக்கையையும் வழங்க முடியுமென்றும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த விலைகளின் படி 40 மில்லி லீற்றர் பொலிஸ் திரவ போத்தலொன்றையும் 36 கிராம் பொலிஸ் டின் ஒன்றையும் ரூபா 62 வீதம் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்புக் காணப்பட்டது என்பதும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாமையால் திரட்டிய நிதியத்திற்கு ரூபா 657,800 நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) கற்பிடிட்டி கண்டல்குளி சிவில் பாதுகாப்பு பயிற்சி முகாமிலும் வளவிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய களஞ்சிய கட்டிடம் தொடர்பில் மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கட்டிடத்தின் நிர்மாண ஒப்பந்தம் தம்புள்ள கமத்தொழில் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அச்சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வேலை சிட்டைகளின் படி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆகிய 3 கட்டங்களிற்காக 2009 திசெம்பர் 14 ஆந் திகதி வரை ரூபா 2,817,766 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக தெரிவுப் பரிசோதனையில் வேலைச் சிட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகள் செய்யப்படாத போதிலும் ரூபா 585,990 தொகை செலுத்தப்பட்டுள்ளமை கணக்காய்வில் வெளிப்பட்டது.

(ii) எவ்வித நியமத்திற்கும் அமையாது செய்யப்பட்ட வேலைகளிற்காக ரூபா 413,132 செலுத்தப்பட்டிருந்தது.

(iii) மேற்படி விடயங்களின் படி ரூபா 2,817,766 செலவில் நிர்மாணிக்கப்பட்ட களஞ்சியக் கட்டிடம் உரிய நியமத்தின் பிரகாரம் நிர்மாணிக்கப்பட்டிராமையும் சிட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண வேலைகள்

| | |
|---|---|
| துணைச்சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**10.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

மீளாய்வாண்டின் இறுதியில் ஏற்படுத்திக் கொண்டிருந்த பொறுப்புக்களின் பெறுமதி ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் ரூபா 565,852 பெறுமதியான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**10.5 இணக்கமின்மைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| நிதிப் பிரமாணம் | | |
| நி.பி. 94 | 2,082,736 | வேறு முறைகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்த்து வருடாந்த மதிப்பீட்டில் அதற்காக நிதி ஏற்பாடு காணப்பட்டால் அன்றி எந்தவொரு திணைக்களத்தினாலும் வேலை, சேவை அல்லது வழங்கலிற்காக எவ்வித செவினத்திற்கு அல்லது பொறுப்பிற்கு கடப்பாட்டினை |

(ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 7 ஆம் பந்தியின் 7.7 இன் படி விலைமனுக்களை மதிப்பீடுசெய்கையில் கிடைத்துள்ள விலைமனுக்களில் வெற்றிகரமாக பிரதிபலிப்பினைக் காண்பித்துள்ள குறைந்த விலையினை சமர்ப்பித்துள்ள விலைமனுவினை தெரிவுசெய்ய வேண்டிய போதிலும் இரண்டாவது குறைந்த விலையினை சமர்ப்பித்துள்ள தனியார் நிறுவனத்திடம் தரைஓடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் குறைந்த விலையினை சமர்ப்பித்திருந்த தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 10.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

இலங்கை கடற்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள 25 உத்தியோகத்தர்கள் மற்றும் 284 கடற்படையினர் பதவியணியாக திணைக்களத்தில் சேவையாற்றிய போதிலும் இதுவரை பதவியணி திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 10.8 உள்ளகக் கட்டுப்பாடு

பின்வரும் உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/09/01 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டுக்கு ஒன்று வீதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.